473

# விமலபோதம்.

ஸ்வாமி விமலானந்தா அவர்களால்
தொகுக்கப்பட்டது.

---

சென்னை,
சோல்டன் கம்பெனி அச்சுயந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

---

1929.

[விலை அணு 2.

உ

ஓம் சித்தாய நமா:

# விமல போதம்.

சேலம் ஜில்லா, ஆத்தூர் தாலூக்கா,

சன்யாசிமலை அடிவாரம், வடபுறத்தில்

சன்யாசி சித்தராற்ரூபிக்கப்பட்ட

நிருவாண நிலையத்தினதிபதி

ஸ்ரீ சன்யாசி வரதாண்டார் சிஷ்யப் பிரசிஷ்யர்


ஸ்ரீ வேலாயுதஸ்வாமி மாணவர்களில் ஒருவராகிய

சித்தர் சமயப்ரவர்த்தகாசாரிய ப்ராசாரியர்

**ஸ்வாமி விமலானந்தா**

அவர்களாற் றெழுக்கப்பட்டது.

1929.



சித்தர்சமைய ப்ரவர்த்தகா சாரியப்றசாரியர்

ஸ்வாமி விமலானந்தா.

உ

ஓம் சித்தாய நமா.

# விமலபோதம்.

---

இந்தியாவினது பூர்வ சமயம் யாது? சித்தர் சமயமேயாம். சித்தர்களென்றால் வேடிக்கைக்காரர்களென்று கூறுவார்களே அங்ஙனமிருக்க நீவிர் கூறுவது எங்ஙனம் சமயமாகும். ஆ! அங்ஙனமன்று. சித்து என்றால் சிறியது அறிவு என்று பொருள் தருவதாம். அவை யாங்ஙன மெனிற் கூறுதும். பழைய அணுவாதியர்கள் எந்த பொருளைச் சிறியது என்று கூறுகிறார்களோ அதற்கும் சிறியது என்று கூறலாம். காரணம் ‘அணுவுக்கு அணுவாய் அப்பாலுக்கப்பாலாய்’ உடையது என்று எப்பொருளை கூறினார்களோ எப்பொருட்டுணைக்கொண்டு யாவையும் பிரித்து அணுவாக்க இயன்றார்களோ அது சித்து. அதுவும் காலத்தானும் இடத்தானும் செயலானும் மக்களானும் அரிய உபாயங்களானும் மாறாது, எக்காலத்தும் எவ்விடத்தும் எச்செயலாலும் எவராலும் எவ்வளவாலும் மாறாத பேரறிவு வடிவாக உள்ள பொருளையே சித்தென்பர். இவ்வியல்பினை இயல்பாக உள்ளபொருள் சகலத்தையும் கடந்து நிற்றலால் கடவுளென்று கூறுவது.

இங்ஙன மில்லாது காலமாதிகளால் மாறுகின்றதோடு உடலிற் காணும்படியாக விளங்கியும், உயிர் பாலறியுந் தன்மை யுடைமையால் உயிர்களென்றும், சித்து இருவகைப் படுமென்க. காரியவடிவாகிய உலகமும் அதன் காரணமும் இருப்பது கண்கூடு. ஆகவே * முப்பொருளும் கலந்த ஒரு

---

* முப்பொருளாவது. சித்து. சிதசித்து, அஜித்து.

தோற்றத்தையே உலகம் என்பது வழக்கு. ஆயினும் உயி ரென்ற பொருளானது காலமுதலிய வசத்தால் மாறுத லாகிய செயலை அறியாதிருப்பதும் அறிந்துகொள்வதும் ஒரு கட்டு. அதனை தெரிந்து அவ்வாறே அனுபவித்து மேலான நிலையை பெறுவதே முத்தி.

இந்த உயிருக்குள்ள குற்றமாகிய பிறப்பு, இருப்பு, இறப்பு இவைகளை மாற்றுவதை அறிந்து அனுபவித்து பிறருக்குக் கூறினவர்களே சித்தரென்க. அங்ஙனம் தோற்றிய சித்தரும் பலராவரென்க. அவர்கள் கூறிய வாறே பலருங்கூடி ஒழுகுவதே சமயமென்க.

நிற்க, காலமாதிகளால் சித்துக்கு மாறுதல் காணப் படுவதே பந்தம். ஆதலால் மாறுதலற்ற இயற்கைச் சித் தினை ஒப்ப செயற்கையால் மாறுதலாகிய குற்றங்களை உணர்ந்து நாளடைவில் முயன்று நீக்கி இயல்பான சித்துக்கு சமமாகிய நிலையை அடைதலே சித்தி. ஆனதால் சித் தானவர்கள் சித்தரென்பது மரபு. அன்றியும் உலகினை விட்டு உயிரும், உயிர்களை விட்டு கடவுளையும் பிரித்து காண வியலாது. உருவமாகவோ, அருவமாகவோ, கலந்தே நிற்கு மென்க. ஆனதால் இயற்கை சித்தின் குணங்களை உயிரா னது உடலுடன் கூடி இருக்கு ஞான்றே செயற்கையால் கருதிய சகல நலன்களையும் பெறுவதே சித்தி. இவைகளை பெற்றாரே சித்தரென்க.

இன்னும் சித்தி யென்றால், தான் கருதிய சகல நலன் களையும் பெற்றுத் தன்னை அடைந்து வேண்டினவர்களுக்கு அவ்வாறே பெறும்படி செய்வது சித்தி யென்க.

அருவமாகிய மனத்தால் எண்ணிய எண்ணம் கரும மென்றும், வினையென்றும், ஊழென்றும் பெயர்பெற்று, உருவமாகிய உடலாகவும், உண்பனவாகிய பொருளாகவும், வந்து மக்களை வருத்துகின்றதென்பது வெள்ளிடை மலை யாம். அவ்வாறே வருத்தாமலிருப்பதற்கு வேண தந்தி

ரங்களைத் தாமே கற்றும் பிறருக்கும் போதிப்பவர்களையே சித்தரென்பது.

மற்றும் மக்களாய் பிறந்து வளர்ந்து பிணி மூப்பா திய வெய்தி சாக்காட்டை எதிர் நோக்கியும் மனத்தினுல் நினைத்த காரியம் செய்ய வியலாது, பேய், நாய், சீ, சீ என்று துன்புறு ஞான்று தந்திரத்தாலும், மருந்தாலும், யோக முயற்சியாலும் சிறுவர் தன்மை அடைந்து முற் கூறிய பிணி மூப்பை எதிர்த்து மன நிலைமை கலையாது நிற்பது சித்தியென்க.

மற்றும் அறிவின் குறைவு விரிவிற்கேற்றவாறு சிற் றின்பம் பேரின்பமென்பது அறிஞர் அறிந்ததே. இதனுல் செயலும் குணமும் கரணமும் கலந்த அறிவு சிறிதாகவே இருக்குமளவும், அனுபவித்து வரும் இன்பமும் சிறிதாக வே யிருக்குமென்க.

இனி, செயல், குணம், கரணம் கலந்த அறிவையும் பெரிதாக்குவதே சித்தர் செயலென்க. அப்போது வரும் இபைமே பேரின்பம் எனக் கூறுவதால், எவ்வகை யில் குணமும், செயலும், கரணமும் அமைந்து தொழில் புரிகின்றனவோ அவ்வகையி லின்பமும் சிறிது பெரிதா மென்க.

இன்னும் உடலிற் கரணமும், கரணத்தில் குணமும், குணத்தில் செயலும், செயலில் இன்பமும், பெரிது சிறி தாகுமென்பது உண்மையே போல, பூத பரிணமமாகிய உடலிலிருந்துகொண்டு மேற்குறித்த சித்தியை யடையாம லிருக்கும்போதே அகண்ட இன்பானுபவம் வாய்க்குமென் பது பொருந்தாது. ஆனமையின் உடற்சித்தியும், அதனுல் பூரண வின்பானுபவமும், இந்நிலையே சொரூப முத்தியும் ஜீவன் முத்தியுமாம். வெறு வெளியாகின்ற நிலையினை அரூப முத்தியாகிய விதேக முத்தியென்று கூறுவது சித் தர் மரபென்க.

இதனால் முத்தி என்பது பேரின்ப சித்தியென்றும், பேரின்பத்தினையே பூரண வின்பமெனவும், பூரண வின்பத்தைப் பெற வேண்டினால் அவ்வின்பத்தினை ஏற்று அனுபவிக்கத் தக்க வகையில் உடலை பிணியின்றி நிற்க செய்வதே உடற் சித்தியெனவும், இவ்வுடற் சித்தினையே காய சித்தி, ஏம சித்தி, உருவச் சித்தி, அமிர்த சித்தி எனப் பல வாறு கூறுவதென்க. இவை யிற்றை அடைதற்கு தந்திரம் மருந்து முதலியவை அவசியமே. இம்முறையை அடைந்த நவநாதசித்தர்களும், பின்னர் வந்தபதினெண் சித்தர்களும், அதன் பின்னர் வந்த அறுபத்து நான்கு சித்தர்களும் மக்களினிமித்தம் உடற் சித்தியெனவும், உயிர் சித்தியெனவும், அல்லது உயிர் முத்தியெனவும் கூறியுள்ளார்களென்க. அவை யிற்றை சுருக்கமாகக் கூறுவன் கேண்மின்!

உடற்சித்தி என்பது வாத, பித்த, சிலேத்ம மென்னும் மூன்றும் முறையே ஒனறு, அரை, கால், என்னுமோரள வையோடிருத்தல் வேண்டுமென்பது. அங்ஙனமின்மைக்கு காரணம் ஸ்திரீ புருட சேர்க்கை அறவே இன்மையும் அஃது அதிக முடைமையும், அதிக ஆகார முடைமையும் அஃதறவே இன்மையும், அதிக அலைச்சலுடைமையும், அஃதின்மையும், அதிக குளிர் காற்று வெய்யலில் சஞ்சரித்தலும் அவை முற்றிலுமின்மையும், ஆக்கையை அதிக சிரமப்படுத்தலும் அவை முற்றிலுமின்மையும் அதிக கோப முடைமையும், க்ஷவரம், தைலஸ்நானம், ருதுஸ்நானம், மாமிச போஜனமும், அச்சமுள்ளவிடங்களிலும் சந்துஷ்டியில்லாதகாலத்தும் உண்ட உணவு ஜீரணமாவதற்கு முன்னரும், லாகிரி வஸ்து அருந்திய காலத்து இரதியாதலும், காம இச்சையை தரக்கூடிய கதை காவியங்களை படித்தல் கேட்டல் சிந்தித்தலினாலும், மல ஜலங்களை யடக்குதலினாலும், சரீர நாடி நரம்புகள் வலுவடைவதன் முன்னர் 'ஆகுமிளந்தைப் பருவத்தில் போகந்தினஞ் செய்வதினாலும்', விஷ ஜெந்துக்கள் தீண்டுதலினாலும் இன்னும் அனந்த காரணங்களினாலும் ஆக்கை நிலைமாறும். பிணியென்பது பிரத்தியட்ச மாவதினாலும் இவையும் எண்

ணிலியாதலாலும் விரிக்கினிவணிடந் தாராதென்றும் விடுத்தனம். சமயம் வந்துழி விளக்குவமென்க. பிணியுடையாரோடு இல்லாதவர்கள் கூடுதலினாலும் பிணியுறுமென்க. இக்காலத்துண்டாகும் சந்ததிகட்கும் பிணிவரும். இதனை கற்ப ஊரல் என்று கூறுவது.

பின்னருண்டாகும் பிணி புருடரிச்சை யுண்டான காலத்தும் புருடரோடு கூடிய உடனேயும் கோபத்தோடிருக்குங் காலத்தும் குழவிக்கு பாலூட்டுதல் கூடாது. நேர்ந்துழி தனது அவயவங்களை ஜலத்தினால் சுத்தி செய்து நல்ல வாசனைத் திரவியங்களை யணிந்து அல்லது காற்றில் ஆக்கையை பூரிக்கச்செய்து சந்துஷ்டியோடு பால் கொடுத்தல் வேண்டும். அற்றெனில் பிணிவரும். ஆனதினால் தாய்மார்கள் ஜாக்கிறதையாயிருத்தல் வேண்டும். இவையிற்றை வெகுளியெனக் கண்டோர்கள் வியாதியால் பீடிக்கப்படுவார்களென்க. பின்னர் பிணிதீர்க்கும் தந்திரமும் மருந்தும் கண்டார்கள். அவை யிற்றை சிறிது கூறுதும்.

தந்திரமாவது உண்ணு முணவுகளில் எது எது ஆக்கைக்கு நல்லனவாய் தோற்றுகின்றதோ அதனை யுண்டு மற்றவைகளை விலக்கியும் விடுதல்வேண்டும். ஆக்கைக் காகாதனவற்றை யுண்ணுதல் கூடாது. வியாதியுடைய காலத்து ஸ்திரி புருட சேர்க்கையில்லாதிருத்தல் வேண்டுமென்பது மருந்துண்ணுங் காலத்தும் அங்ஙனமே இருத்தல் வேண்டும்.

விடியற் காலையில் ஐந்து மணிக்கெழுந்து மல ஜலக்குறிகளை நன்றாய் சுத்திசெய்து அவையிற்றை சுத்தமான ஜலத்தில் படியச்செய்து வாயில் கொஞ்சம் தண்ணீரை வைத்துக்கொண்டு உமிழ்நீர் இறக்குவதுபோற் கொஞ்சங் கொஞ்சமாய் விழுங்குதல் வேண்டும். பின்னர் சுவாசத்தை போதிய அளவு உள்ளுக்கு இழுத்துவிடுதல் வேண்டும். இங்ஙனே பத்து பதினைந்து நிமிஷத்திற்குப் பின்னர் வெளிப்போந்து நல்ல காற்றுள்ள விடத்திலுலாவி மலங் கழித்து தந்த தாபனம், ஸ்நானம் முதலியன செய்தல் வேண்டும்.

உண்ட பின்னர் நல்ல காற்று வாங்குதல் வேண்டும். வேலை செய்பவர்களாயிருந்தால் செய்துகொண்டும் நடக்கவேண்டியவர்களாயிருந்தால் நடந்து கொண்டும் நல்ல யெண்ணத்தோடும் சுவாசத்தை சற்று நேரம் கவனித்தல் வேண்டும். உணவு ஒருவாறு ஜீரணமாகும் வரையிலாமென்க.

மருந்தாவது உலோகம், இரத்தினம், பாஷாணங்களையும், வேர், பட்டை, பூ, பிஞ்சு, காய், கனி, கிழங்கு, இலை, வித்து, புற் பூண்டு முதலியவற்றை பாகம் செய்தலுமாம். இவையிற்றை யுண்டு பிணிதீர்த்து இருப்பதனைத்தான் உடற்சித்தியென்றும், காயசித்தியென்றும், ஏமசித்தியென்றும் கூறுவதென்க.

உயிர்சித்தி தனி யிடைந்தனையடைந்து இதயதுக்கமேவாமற் றேள், தலை, கழுத்து, மார்பு, உடம்பு இவைகளை நேர் நிறுத்தி இந்திரியங்களை விடயமேற் செல்லாது விலக்குவது.

அறியாமை அறிவகற்றி அறிவினுள்ளே அறிவிதனை அருளினுல் அறியாதே அறிந்து குறியாதே குறித்தந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குழைந்திருத்தலென்பது.

இம்முறையானே இளமை, அன்பு, அழகு, ஆனந்தம், வலிமை, அறிவு, மங்கலம், வியாபகம், தேசசு முதலிய நவகுணங்கள் சித்திக்கும். இவை சித்தித்தமாத்திரத்தே முன்வினையகலும். அகன்ற பொழுதே பவரோக நிவர்த்தியாகி பேரானந்த சித்தினேடு இரண்டற கலந்து நிற்றலே பேரின்ப சித்தியென்னும் பெருவாழ்வாம். இதனைத்தான் முத்தி, வீடு, மோட்சம் என பலபெயரோடு கூறுவதென்க.

இல்லறமேன்பது ஸ்திரி புருடர்கள் ஒரு மனதாயிருத்தல் வேண்டும். தீயவழியிலிரண்டு பேரும் பிரவேசித்தல் கூடாது. ஒவ்வொருவரும் தனதபிப்பிராயத்தை வெளி

யிடுவதன் முன்னரே தங்களுக்குத் தீமையை விளைக்குமா வென்பதை யோசித்தல் வேண்டும். மனமொத்துச் செய்யும் ஸ்திரி புருட சேர்க்கையே தீமையைத் தருமெனின் வேறு யாதுதான் தீமையைத் தாராது. ஆனதினால் மானிடர்கள் ஒவ்வொரு காரியங்களையும் யோசித்துதான் செய்தல் வேண்டுமென்பது.

**மறு மணத்தைப்பற்றி சில கூறுதும்** ஒருவனுக்கு ஒரு மனைவியே யிருத்தல் வேண்டுமென்றும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மற்றொரு பெண்ணை தீண்டுதல் கூடாதென்றும் அங்ஙனம் நேர்ந்துழி அன்னான் மனைவியும் அயலானை தீண்டுதல் பிழையாகாதென்க. மனைவி யிறந்த மன்னன் மாற்றோடோள் தோய்தல் மாண்பெனின் மன்னனிறந்த மங்கையும் மாற்றான்றோள் தோய்தல் மாண்பாகும். இவை கூடாதெனின் அவையுங் கூடாதென்க. மக்கட் பேறின்றிய மன்னன் மக்கள் நிமித்தம் மறு மணம் செய்யலாமெனின் மங்கையும் மக்கட்பேறு விரும்பி மறு மன்னரோடு மணம் மாண்பாமென்க. இஃதாகாவெனின் அஃது மாகாதென்க.

**இனி** மணவினை யெங்ஙன மாக்குதலென்பது கூறுதும். மணமகன் மணமகளது தாய் தந்தையர் உடன் பிறந்தார் சுற்றத்தார் முதலியோர்களால் தெரிந்தெடுத்துக் கொண்ட மணமகளை மணமகனும் நன்றாய் விசாரித்து தனது ஞாதிகளறிய மணந்துகொள்ளல்வேண்டும். அங்ஙனே மணமகளும் நன்றாய் விசாரித்துத்தானேற்றுக்கொள்ளல்வேண்டும். அல்லாது தனது ஞாதிகளின் கட்டாயத்திற்கு மனமொவ்வுதல் கூடாது. இருவருமொத்துக்கொண்ட பின்னர் தங்கள் தங்கள் ஞாதிகள் முன்னிலையில் தாங்கள் ஒருவரை ஒருவர் வஞ்சிப்பதில்லை என்று பிரமாணஞ் செய்து புருடனால் பெண்ணுக்கும், பெண்ணால் புருடனுக்கும், ஓர்வித அடையாளங்களை அணிதல் வேண்டும். இந்த அடையாளங்களை கைவிடாது காப்பாற்றி வருதல் வேண்டுமென்பதே மாண்பென்க. மணவயது இருபது

ஸ்திரி புருடர்கட் கிருத்தல் வேண்டும்; இன்றேனில் நோயுறுமென்க. "ஆகுமிளந்தைப் பருவத்தில் போகஞ் செய்யில் பொல்லாப் பிணி வருமென்று நந்தியம் பெருமானருளினரென்க" ஆதலினல் வயதுவந்தபின்னரே மணவினை முடித்தல் வேண்டும். அது பரியந்தம் ஆண் பெண் இருபாலரும் கல்வியிலும் கைத்தொழிலிலும் பழகுதல் வேண்டும். காம யெழுச்சியைத் தரக்கூடிய காவியம் ஓவியம் பார்த்தல் கேட்டல் கூடாதேதெனில் பின்னர் சிந்தித்தல் வந்துவிடும். அதனல் நாடிகளுக்கு வலிவு குறைந்து மனே முயற்ச்சி அதிகப்பட்டு சுக்கில சுரோணிதம் நீத்து நல்ல வுணர்ச்சியைக் கெடுத்துவிடும் "சுக்கிலங்கலித்தலால் பெறும்பேறு கெடுமென்று" கூறியுள்ளார்கள் பெரியாரென்க. ஆதலால் கூடாதென்க. கூடுமெனில் வியாதியால் பீடிக்கப்பட்டு மெலிந்து சாவரென்க.

ஆனதினல் மணவினை மேற்குறித்த வயதிற்குமுன்னரே முடித்தல் கூடாது. நேர்ந்துழி பிறக்கும் பிள்ளைகள் பேருலகையாளும் பொறுப்பற்ற பிள்ளைகளாய் பிறக்கும். அவை நோயும் பாயுமாய்த்தான் கிடக்கும். "நோயாரும் வந்து குடிபுகுந்து கொண்டாற் கொண்ட நோயும் பாயாரும் தவிர வேறுபாங்கில்லை பாழுடற்கே" என்ற முதியோர் வாக்கியத்தை கவனித்தல் அவசியமேயாமெனக. ஆதலாற் சீருஞ் சிறப்புமுள்ள புதல்வரைப்பெற விரும்புவோர் மேற்குறித்த வயது வந்தபின்னரே மணவினை முடித்தல் சாலுமென்க.

இனி புத்திரரை பெறுதற்கே ஸ்திரி புருடர் கூடுதல் வேண்டும். அக்கால் சந்துஷ்டியுள்ள காலமாயும் நல்ல நினைவோடு கூடுதல் வேண்டும். அற்றெனில் நற்புத்திரப் பேறடைதலின்றிப் போய்விடுமென்க. கெர்ப்பந் தரித்த பின்னர் ஸ்திரி புருட சேர்க்கை கூடாதென்க. ஸ்திரியானவள் நல்ல சாத்திரங்களைப்படித்தல், நல்ல நினைவோடிருத்தல், சுசியோடிருத்தல், தெய்வ சிந்தனையோடும் தனதாக்கையை காற்றினுலாவச் செய்தல், நல்ல வாசனையை

அணிதல் முதலிய நற்செய்கைகளையே செய்தல் வேண்டும். தனது சுற்றத்தாரால் தூஷிக்கப் பெருமல் ஆசீர்வதிக்கப் படல் வேண்டும். அற்றேனில் புத்திரப்பேறு புற்றிற் பேருய் முடியுமென்க. ஆதலினுல் கெர்ப்பிணிக்கு காம யிச்சையுண்டாதல் கூடாது. நாம் நல்ல புத்திரனைப் பெறு வோம், அப்புத்திரன் பேருலகையாள்வான், பெருஞ் செல்வ வானுவான், பிறருக்கு நன்மையே நாடுவானென்ற வெண் ணத்துடனிருத்தல் வேண்டும். புததிரனை பின்னர் நல்ல வெண்ணத்துடன் பாலூட்டி உபசரித்தல் வேண்டும். குழவியின் முகத்தைக் காணுங்காலத்தில் தனது முகஞ் செழிப்போடிருத்தல் வேண்டும். கோபக்குறி காமக்குறி யோடிருத்தலாகாவாம். அங்ஙனம் நேர்ந்துழி குழவிக்கு பிணிவருவதோடு நல்ல குணமும் மணமும் அமையாதென்க.

குழவி வார்த்தையாட எத்தனிக்குங்காலத்து நல்ல வார்த்தைகளை சொல்லி கொஞ்சுதல் வேண்டும். அற் றெனில் தீய விஷயங்கள் குழவியின் மூளையிற் படிந்து தீத்தொழிலைச் செய்யமுன்வருமென்க.

குழவி நன்ருய் வார்த்தையாட முயன்று நிற்குங்கால் "நாமார்க்குங் குடியல்லோம், நரரை வஞ்சியோம், தரித் திரியத்திற்றயங்கோம், ஏமாப்போம், பிணியறியோம், இன் பமே எந்நாளும் துன்பமில்லை" என்றும் போதித்தல் வேண்டும். கடவுளொருவனே சுதந்தரமுடையான். நாமவனுக்கேயாள் அல்லது மனிதருக்கு மனிதன் அடி மை யல்லவென்று கூறி சிறுவர்களை பயிற்றல் வேண்டும்.

பொருளீட்டல் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்ற மூதுரையைக் கைக்கொண்டு தீய வழியிற் பொரு ளீட்டுதல் கூடாது. எப்போது ஒருவனேமாந்திருப்பான் அப்போது அவனது பொருளைக் கைப்பற்றுதலென்ற நோக்கங்கூடாது.

வாக்கால் மனத்தால் சரீரத்தால் நல்ல சிந்தனையோடும் பொருளீட்டுதல் வேண்டும். கூலியாள்கட்கு குறைந்தக்

கூலியுந் நிறைந்த வேலேயும் கொடுத்தல் கூடாது. ஞாயமாய் வேலே செய்தல் அதற்குள்ள கூலியை வாங்குதலும் வேண்டுமென்க. வட்டி வாங்குவதும் ஞாயமாய்த்தான் வாங்குதல் வேண்டும். வட்டிக்கு வட்டி வாங்குவது கூடாது. அங்ஙனம் வாங்கித் தருமஞ் செய்தலும் பயனுடையதன்றென்க.

இனி மரித்தோர்களேக் குறித்து சில கூறுவதவசியமாம். அதாவது மரித்தவர்களே அன்னார்களது சந்ததியார்களோ, பந்துமித்திரர்களோ, தங்கள் தங்கள் இயல்பிற்குத்தக்குந்தபடி தகனஞ் செய்வது அல்லது பூமியிற் புதைத்தல் வேண்டும். அன்றேடு அதனேக் குறித்த சூதகமும் ஒழிந்தது. அன்னார்களது பிரிவாற்ருமைக்கு தகுந்தபடி ஞாதிகள் துக்கங் கொண்டாடுவது தகுதி. அங்ஙனே புருஷனே இழந்த பெண்ணும், பெண்ணே இழந்த ஆணும், தங்களது அன்பிற்கு தக்கபடி துக்கங்கொண்டாடலாம். அதற்கோர் நிபந்தனே அவசியமன்று.

மறுமணஞ்செய்ய விரும்பினுல் முன்னர் மணஞ்செய்த ஞான்று செய்துகொண்ட அடையாளத்தை பலரும் அறிய கழற்றிப் பொதுத் தருமத்திற்குக் கொடுத்துவிட்டு புதிய மணத்து அடையாளங்களே தரித்துக்கொளல் வேண்டும். இக்கால் தங்கள் வசமுள்ள சொத்தை இக்காலத்துள்ள மக்கட்கு கொடுத்துவிடலாம். இல்லேயெனிலோ தாங்களே அனுபவித்துக்கொள்ளலாம் எனின் மறுமணங் கூடாது. காமயிச்சையின்றிய துறவிகளேப் போலிருத்தல் வேண்டும். இவை சாத்தியமன்றெனில் அந்த சொத்தை கல்விக்கழகத்திற்கு அல்லது மருத்துவசாலேக்கு அளித்துவிட்டு மணந்துகொளல் வேண்டுமென்பது.

மற்றென்று, மணமாவதற்கு முன்னர் மஞ்சட் குளித்தல், குங்குமமணிதல், பூ முடித்தல், வளேயலணிதல் முதலியன பெண் மக்கட்கு உரியனவே. மணவாளனேப்பிரிந்த பின்னர் இவையிற்றையெல்லாம் நீக்குத

லவசியமெனக் கூறுகிறார்கள். இம்முறையில் பெண்கள் மணமாவதற்கு முன்னரே அணிந்து வந்த குறிகளை பின்னர் நீக்க வேண்டுமென்பது அவசியமாயின் புருடரும் அங்ஙனமே நீக்குதல் அவசியமன்றோ. அல்லவெனில் பெண்களுக்கும் அல்லவெனபதுதானே. ஆதலால் விலக்குதல் ஒருவருக்கு அவசியமெனில் இருவருக்கும் அவசியமேயாமென்க.

இல்லறம் அவசியமா? துறவறம் அவசியமா? யென்பதைப்பற்றி சித்தர்கள் ஒப்பனையாதெனிற் கூறுதும். துறவறத்தைப்பற்றிய வரையில் நல்ல அபிப்பிராயமில்லை ஏனெனின் துறவு "துன்பந்தோன்றில் எவ்ருந்துறந்து ஏகராயின்பந்தேடல் இயற்கை" ஆதலின் அதற்கோர் உரிமை யவசியமில்லை யென்க. துறந்தோனென்பது தேகாதி பிரபஞ்சம் முற்றிலுந் தோற்றாதாதலால் அவனுக்கோர் சட்டம் அவசியமில்லை. ஆனல் பிரம்மசரியம் அவசியமே.

உலகிற் காணப்பட்ட எல்லா வஸ்துக்களும் ஒன்றை ஒன்று பிரிந்திருப்பனவாகக் காணப்படவில்லை. அதாவது நீட்ட வடிவமும் வட்ட வடிவமுமாயிருத்தலாலென்க. அவை யாங்ஙனமெனிற் கூறுதும். வண்டிச்சக்கரத்தை யெடுத்துக்கொள்வோம். அவை நீட்ட வடிவமும் வட்ட வடிவமுமாய்த்தா னமைந்திருக்கிறது. இதுபோலவே எவ்வித சாமான்களை எடுத்துக் கொண்டாலும் அங்ஙனமேயிருத்தலால் நீட்டவடிவும் வட்டவடிவும் அவசிய மென்றுதானேற்படுகிறது. இதனை உத்தேசித்தே சித்தர்கள் நீட்ட வடிவமும் வட்டவடிவமுமுள்ள இலிங்கப் பிரதிட்டையை செய்தார்கள். ஆனமையின் புருடனைவிட்டுப் பெண்ணும் பெண்ணைவிட்டுப் புருடனும் பிரிந்திருந்தால் உலகிற்குப் பயனில்லை. ஆதலினுல் இல்லறமே சிறந்ததாகுமென்க.

இவண் கூறிய நீட்டவடிவையும் வட்ட வடிவையும் விரித்துக் கூறுவதெனில் விரியும். ஆதலால் சுருக்கிக்

கூறியதென்க. விரியினும் விரியட்டுமென்று கூறுவோமானால் பொது ஜனங்கட்கு அதிருப்தியை அளிக்கும். ஆதலால் விடுத்தமென்க. சூட்சம அறிவுடையார் அறிந்து கொள்ளுவார்கள். துறவிகட்கு இடம் பொருள் ஏவல் அவசியமோ வெனில் இல்லையென்க. இடம் பொருள் ஏவலைக் குறித்து மடம்புகுநாயன வகப்படாமல் நிராசையோடு கூடியிருத்தல் இடமும் பொருளும் ஏவலுமாமெனக் கூறியுள்ளாரென்க.

இனி மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் சீவர்கட்கு நன்மையே செய்தல்வேண்டும். அவை யாங்ஙனமெனிற் கூறுதும். மனத்தினால் செய்வது எல்லோரும் நன்மையை அடைய வேண்டுமெனபது; வாக்காற் செய்தலென்பது இதமான வசனங்களைக் கூறுவது. அது எள்ளளவும் தீமையைத்தாராதிருத்தல் வேண்டும். காயத்தாலும் அங்ஙனமே செய்தல் வேண்டும். ஒருவன் நல்ல நிலையை விரும்பினால் அவனுக்கு நாம்வாக்கினாலும் காயத்தினாலும் எவ்வளவு உதவி செய்யமுடியுமோ அவ்வளவும் செய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்யச் சாத்தியமில்லை யெனில் மனத்தினாற் செய்தல் வேண்டும். அதாவது குறித்த மனிதன் நல்ல நிலமையை அடையட்டுமென்று நினைப்பது. நோய்வாய்ப்பட்டு வருந்துபவருக்கும் அங்ஙனே செய்தல் வேண்டும்.

தனக்குத் தானுயர்ந்தோனென்று கூறுவதைத்தவிர மற்றவர்களைத் தாழ்ந்தவனென்று கூறுதல் கூடாது. எல்லாரு முயர்ந்தவர்கள் தான். ஆனால் எல்லாருக்கு முயர்ந்தோன் கடவுளொருவனே. அவனே சர்வ சுதந்தரன்; மற்றவர்களெல்லாம் தாழ்ந்தவர்களே; இயற்கையிற்றனிகன் கடவுள். சேர்க்கையிற்றனிகன் மனிதன். ஆனதினால் சிறியவர்கள் மனிதர்களே பெரியவன் கடவுளொருவனே என்று நினைத்தல் வேண்டும்.

மனோவாக்குக் காயங்களினாற் றீயவை செய்தல் முதலியவை சாமியம் ஆகாது. ஆதலினால் நல்லவை

களையே செய்தல் வேண்டுமென்பது பெரியார் துணிவு. அங்ஙனம் நல்லன செய்வதெல்லாம் சாமியம். தீயனசெய்வதெல்லாம் வைசம்மியம். திருஷ்டாந்தமாக நாம் ஒருவன் மனைவியை இச்சிக்கிறோம். அதனால் நமக்கு சந்துஷ்டியுண்டாகிறது. நமது மனைவியை மற்றொருவன் விரும்பினால் நாம் துக்கத்தை யடையாதிருத்தல் வேண்டும். நாம் ஒருவனது பொருளை இச்சிக்கிறோம்; அதுபோல நமதுபொருளையும் ஒருவனிச்சிக்கிறான். அப்பொழுது நாம் சந்துஷ்டியுடையவனாயிருத்தல்வேண்டும் என்பதே. ஆதலினால்தனக்குடையவைகளை விட்டுவிட்டு பிறரிடத்துள்ள பொருளை இச்சித்தால் துக்கமுண்டாகும். அதுபோலவே அன்னனுக்கு முண்டாம். ஆனதினாற்றீயவை சாமியமாகாதென்க. நல்லவைதான் சாமியமாகும். விரிவஞ்சி விடுத்தனம்.

இனி கற்புநிலை "கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை" என்பதை மறந்து கண்ட மங்கையர்களைக் காமுற்றுதிரியும் கற்றவர்காள்! "கற்பென்பது சொற்றிரம்பாமை" அதாவது ஒரு பெண் ஒரு புருடனைத் தலைவனாகக் கண்டு அவனுக்கு மாறாய் நடப்பதில்லையென்று கூறுவது. அதாவது சத்தியம் சொல்லலென்பதாம். அங்ஙனங் கூறிய பின்னர் அப்பெண்ணை கேவலமாய் நடத்தினால் அத்தோஷம் யாரைச் சாரும். தலைவனைத்தான் சாரும். சொன்ன சொல்லை எவன் எவள் மறுதலிக்கின்றார்களோ அவர்களெல்லாம் கற்பில்லாதவர்களென்க. அதாவது ஒருவனுக்கு ஒரு காரியத்தை செய்து தருவேனென்று கூறிவிட்டுபின் அவைகளை எவ்வளவு சிரமமாயினும் அதாவது உயிர் துறக்க நேரிடுமாயினும் செய்வதுதான் கடமை. அவை அசாத்தியமாயிற்றே யென்று விடுவது சோற்றிறம்பியதாய் முடியும். ஆதலினால் செய்தே தீருதல் வேண்டும். செய்யாதொழியின் கற்பின்மை யென்பதாய் முடியும். இவை ஆண்பெண் இருபாலருக்குமுள்ளதே. ஆனதினாற் கற்பென்பது பெண்கட்கே உரியதென்று கூறுதல் சாலவும் பொருத்தமுடையதன்றென்க. இவையிற்றையும் விரித்துக் கூறுவது மிகை என விடுத்தாம்.

இனி ஜீவகாருண்ய மென்ப தென்னை என்பதை பற்றி சிறிது கூறுவோம். ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வனவும், நடப்பனவாகிய மிருகாதிகளையுங் கொன்று தின்பதனைவிடப் பாவம் மற்றொன்றுண்டு அதாவது பொய் சாட்சி சொல்லுதல், பொய் பத்திரமெழுதல், முதலியவற்றோடு மன நோகச் செய்தலென்பதுதான் மிகையாம் அதாவது அபாண்டமான குற்றத்தைச் சுமத்தி சபையிலவமதித்தல் முதலியன. இதனை நினைந்து நினைந்து எதிரி வருந்தி வருந்தி தவிப்பான். இதுவன்றியும் பொய் சாட்சி சொல்வதினால் எதிரிக்கு தீராத தீமையுண்டாவதோடு தானடையவேண்டிய பூஸ்திதி முதலியவற்றையுமிழந்து நாடுவிட்டு நாடு சென்று மனவி மக்களோடு வருந்துகிறான். பொய் பத்திரத்தினாலும் அங்ஙனே கேடு சம்பவிக்கின்றது. இவர்கள் எல்லாம் மனந்துடித்து வாடுதலினால் மேற்கூறிய உயிர் பிராணிகளை உயிர் நீத்தலைவிட பாவம் லட்சமடங்கு அதிகமென்றே சித்தர்கள் கூறுகின்றார்களென்க.

இங்ஙனம் கூறுவதால் மிருகாதிகளைக் கொலை செய்தலென்பது நலமென்று எண்ணுதல் கூடாது. கொலை செய்தல் மிகு பாபமேயாம். அதனைவிட பாபம் மிருகாதிகளை ஜீவனோடு வருத்துதலாம். ஆனால் வண்டிகட்டல், உழுதல் முதலியன பாபமாமே ஆம். ஆனால் பயிர்த்தொழிற்கு மிருகாதிகள் அவசியமில்லையோ? இல்லையென்பதே என்? நாமே கருவிகளினால் வெட்டல் கிளைத்தல் முதலியவற்றால் பயிர் செய்து கொள்ளலாமே. அம்முறையில் கிடைக்கும் வருவாயைக் கொண்டு அறமாற்றுவது தகுதியன்றோ. துறவிகளுமிங்ஙனே மிருகாதிகளை வருத்துகிறார்களென்பது.

விக்கிரகாராதனைத் தோற்றம் இளமை, அன்பு, அழகு, ஆனந்தம், வலிமை, அறிவு, மங்கலம், வியாபகம், தேசசு, முதலியவை இயாங்காங்கு கண்டார்களோ அவணெல்லாம் பேரானந்த சித்தினது தன்மையைக்காட்டக் கண்டு களிபேருவகைப்பூத்து நின்றார் மக்களென்க.

நவகுணங்களைய் திசித்தினது தன்மையை யடைந்த சித்தர்களது ஆக்கை மண்மிசை விழுந்தபின்னர் பூமியிற் குகை செய்து அதற்குள்ளிருத்தி, மெல்லிய மணலால் மூடி மேல்மேடையிட்டு, விருட்சங்களை யமைத்து நீட்டவடி வாகிய தண்டத்தையும், வட்டவடிவாகிய சக்கரத்தையும் இசைத்து ஸ்தாபித்து வணங்கி வந்தார்கள். இவையிற்றை இலிங்கமெனக் கூறுவது.

பின்னர் இல்லற ஞானி, துறவற ஞானி என்ற பேதம் ஏற்பட்டு அதற்கிசைய திருவுருவங்களை அமைத்து விழாக் கொண்டாடி வந்தார்கள். அவை துறவறமடையும் விழா, விவாஹ விழா, விருந்துண்ணும் விழா, திருமஞ்சன விழா, பிள்ளைபெறும் விழா, திக்விஜயம் செய்யும் விழா, சிறை எடுக்கும் விழா, தாசிவீட்டுக்குச் செல்லும் விழா, சமராற்றும் விழா, சிறையிலடைக்கும் விழா, கருமாதி, சிரார்த்தம், வேட்டைமார்க்கம் முதலிய பல விழாக்களைக் கொண்டாடி வருகின்றார்கள்.

**விக்கிரக அமைப்பு** தாய் தந்தை, தமக்கை, மாமன், மாமி, மைத்துனன், மைத்துனி, பேரன், பேத்தி, கூத்தி யார், முதலிய பிறவும், காலாள், மேலாள், மந்திரி பிரதானி, ஸைன்னியங்கள், வாகனாதிகள், இரதம், வாள், கதை, வில், அம்பு, சங்கம், சக்கரம், அம்புறாத்தூணி முதலிய பிறவும்.

**கோபுர அமைப்பு** ஸ்திரி புருடர்கள் நின்று சேருங் கோலம், கிடந்து சேருங் கோலம், பிள்ளைப் பெறுங் கோலம், தலை கீழும் மேலுமாக நின்று போகிக்கும் கோலம், சும்பனாதிகளும், பெண்குறி, ஆண்குறிகளைச் சுட்டிக்காட்டி பரிதவிக்குங் கோலம் முதலிய ஆபாசங்களும்.

மகரிஷிகள் மார்போடு தழுவுதல், கொஞ்சுதல், குலாவுதல், கண்காட்டிக் காதலித்தல், தலையிலும், மார்பிலும், நாவிலும், பெண்களை யமைத்து வைத்திருக்குங் கோலம் முதலிய பிறவும்.

இங்ஙனமுள்ள ஆபாஸ திருவுருவங்களை ஆலய தரிசனத்திற்கு செல்லும் மக்கள் கண்டு காமவெறி கொள்வார்களல்லது நன்மையை நாடி நலம் பெறுவாரென்று கூறவியலாதன்றோ ! ஆதலினால் இங்ஙனமுள்ள ஆபாசங்களை ஆலயத்தினின்று விலக்குவதே தகுதி யுடையதாம். மேற்கூறிய சித்திரங்களைக் கண்டு காதலுறாது நிற்பவர் சிலரே. பெரும்பாலும் தீமையையே நாடுவரென்க ஆதலின் சீர்திருத்துதல் அவசியமே.

**அபிஷேகம்** பால் அபிஷேகமென்பதை எடுத்துக்கொள்வோம் : பாலானது கன்றிற்கே உரியனவாம். இயாங்ஙனமெனில் கன்றீனுவதற்கு முன் பசுவில் பால் உண்டாவதில்லை. அக்கன்றை வஞ்சித்து பாலைக் கறந்துவிடுகிறோம். இப்பாலைக் கடவுட்கு அபிடேகஞ்செய்வதினாலுள்ள நன்மை என்னவென்று யோசித்து உணருங்கள். தாயின் பால் பிள்ளைக்கே யுரியதென்பதை யார்தான் மறுக்க முடியும். அதனை நாமெடுத்துக்கொள்வது வஞ்சகந்தானே. இவையிற்றை ஜீவகாருண்ய மென்பதெங்ஙனமோ !

**தேன் அபிஷேகம்** தேன் ஈயினது குஞ்சிற்கே யுரியது. ஈயானது கருப்பையுற்ற காலத்து தான்வசிக்க ஆடையாகிய கூட்டையமைத்து, பூக்கள் தோறுஞ்சென்று தேனைப் பருகிக் கொடுவந்து ஆடையில் பெய்து அதன் மீது தனது முட்டையை விசிரிம்பித்துக் காத்திருக்கும். அவை பதினைந்தாம் நாளாகிய அமாவாசை தினம், அம் முட்டை வெடித்துச் சிறு புழுக்களாகி விடும். அடுத்த நாள் ஒரு துளி தேன் கூட அவ்வாடையிலிராது. ஆனதினால் தேன் குஞ்சுகளுக்கே யுரியது.

நாம் அமாவாசை தினமே தேனை எடுத்து விடுவோமானால் அம்முட்டைகள் வெடித்துண்டான புழுக்கள் இறந்து போய் விடுகின்றன. இதனால் கொலை நேரிடுகின்றதே தவிர வேறில்லை. ஆனதினால் தேன் அபிடேகங் கடவுட்கு பிரீதியுடையதன்று.

**புனுகுசட்டம் அணிதல்:**—புனுகு சட்டமானது பூனையின் சரீரத்துள்ள ஒருமாமிசப்பையாகும். இதனைக் கொய்து, உலர்த்தி, நெருப்பில் வாட்ட ஒரு விததைலம் வரும். அதனோடு வேறுவாசனைகளையுஞ் சேர்த்து விக்கிரங்கட்கு அணிவது, இதற்காக நாள் தோறும் எண்ணிறந்த பூனைகள் கொலை செய்யப்படுகின்றன. ஆதலினால் ஆலயத்தில் ஜீவகாருண்யமில்லை என்பது புலப்படுகின்றதல்லவா!

**சண்டாளபிஷேகம்.** பிரம்மோற்சவங்களில் கடவுள் உருவமாகிய விக்கிரகத்தைத் தாழ்ந்தமக்கள் பார்ப்பதினாலும், விக்கிரகமமைத்திருக்கும் வாகனம், ரதம் முதலியவற்றைத் தொடுவதால் கடவுட்குச் சண்டாளத்துவம் வருவதாம். இதனை நிவர்த்திசெய்ய, மேற்குறித்த பால், தேன் முதலியவற்றைக்கொண்டு அபிஷேகஞ் செய்து மாற்றுவதுதான் சண்டாள பிஷேகமெனக் கூறுவது. இதனால் அர்ச்சகர்களைத் தவிர மற்றவர்களுக்கு எவ்வளவு கேவலம் சித்திக்கிறது. ஆ! சகோதர, சகோதரிகாள்! நமது காயத்தினாலும், பணத்தினாலும் உதவி செய்து ஆற்றிய ஆலயத்தில் இவ்வளவு அவமதிப்பு நமக்கு நேருமானால் அவ்வாலயத்தை வெறுப்பதைத்தவிர வேறென் செய்வது. நமது பாவத்தைப் போக்கும் கடவுட்கு நமது பார்வையானும், பரிசத்தானும் சண்டாளத்துவஞ் சித்திக்குமானால் நமது பாவத்தை நீக்கியாட்கொள்வதென்பது மலடிமைந்தனுக்கு மகுடாபிஷேகஞ் செய்து மன்னராய் வாழ்வதையொக்குமன்றே.

இங்ஙனம் யாம் கூறுவதினால் எம்மிடத்தில் அரூபை கொள்ளற்க. உண்மை கூறினேன். உணர்ந்து கொள்மின், கொள்மின்.

**சமயத் தோற்றம்:**—இளமையை முதலாக தேசசு இருதியாகக் கொண்டுள்ள முருகனைத் தெய்வமெனக் கண்டு வணங்குபவர்களை கௌமாரச்சமயத்தவரெனக் கூறு

வது. அன்பை முதலாக இளமையை இருதியாகக் கொண்டுள்ளது சிவனென்றும், அதனை வழிபடுபவர்களைச் சைவ சமயத்தவரென்றும் கூறுவது. அழகை முதலாக அன்பை இருதியாகக்கொண்டு நின்றதெய்வம் விஷ்ணு. இதனைப் பின்பற்றி வணங்குபவர்களை வைணவசமயமெனக் கூறுவது. ஆனந்தமுதலாக அழகு இருதியாகக் கொண்டுள்ளது பிரமனென்றும் இதனைப் பின்பற்றி வணங்குகிறவர்களைச் சனாதன தருமிகளென்றும் கூறுவது. வலிமையை முதலாக ஆனந்தம் இருதியாக விளங்கும் தெய்வத்துக்குப் பவானீ என்றும், இவையிற்றை வணங்குகின்றவர்களைச் சாக்தேய சமயத்தவரெனக் கூறுவது. இவை ஐந்தும் இந்து சமய மென இக்காலத்து கூறுவது.

அறிவு முதலாக வலிமை இருதியாகக்கொண்டு விளங்கும் தெய்வத்திற்குச் சினன் என்று கூறுவது. இதனைக் கடவுளாகக்கொண்டு நின்றவர்களை ஜெயின சமயத் தவரெனக் கூறுவது. மங்கலத்தை முதலாக அறிவை இருதியாகக் கொண்டு நின்ற திருவுருத்திற்குப் புத்தரெனக் கூறுவது. இதனைக் கடவுளாகக் கொண்டு நின்றவர்கள் பௌத்த சமயத்தவரெனக் கூறுவது.

வியாபகத்தை முதலாக மங்கலத்தை இருதியாகக் கொண்டு நின்ற தெய்வம் "யாவே." அல்லது "எகோவா" என்ற பெயரோடு விளங்கும். இதனைப் பின்பற்றி நின்றவர்களைக் யூத சமயத்தவரெனக் கூறுவது. தேசசு முதலாக வியாபகத்தை இருதியாகக் கொண்டு நின்ற தெய்வம் அல்லா. இதனைப் பின்பற்றி நின்றவர்களை முகமதிய மதஸ்தரெனக் கூறுவதென்க.

இவை முறையே கௌமாரம், சைவம், வைணவம், சனாதனம், சாக்தம், ஜெயினம், புத்தம், யூதம், மகம்மது சமயமெனக் கூறுவது.

மேற்கூறிய நவ சமயத்தை ஆசிரியித்துத் தோற்றிய சமயங்கள் பல்வாம். அவை அகச்சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், புறப்புறச் சமயம் என்பன பிறவும். இவை யிற்றை ஆசிரியித்துத் தோற்றிய வேதாகமோப நிடத இதிகாசாதி புராண ஸ்மிருதிகளாம். இதில் சாதிச் சண்டை, சமயச் சண்டை, சாஸ்திரச் சண்டை கோத்திரச் சண்டை, குலாசாரச் சண்டை, கோவிற்சண்டை, குளத்துச் சண்டை, ஆற்றுச் சண்டை முதலிய பல ஆபாசங்கள் தோன்றின. காரணம் ஆரிய திராவிடர்கள் கூட்டுறவே யாம்.

இக்காலத்து எண்ணிறந்த மகரிஷிகள் தோற்றின ரெனினும் கடைசியாக தோற்றிய வியாச மஹரிஷியால் மேற்கூறிய வேதாதி ஸ்மிருதிகளிறுதியாக ஆய்ந்து, சித்த வாக்கியங்களோடு இசைத்து பிரம்ம சூத்திரமென்னும் ஒரு நூலைக் கண்டார்கள். இவை யிற்றிற்கு பாஷியங் கண்டார் பலராவர்.

கலி. 2500 ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியரென்ற பெரியார் தோன்றி சித்த வாக்கியமாகிய சிவத்திற்கு பரத்துவம் கூறும் பாஷியங் கண்டார். இதனை ஆசிரி யித்து அறதத்த சிவாசாரியாரென்ற பெரியார் சமர்த்தனம் என்னும் ஓர் பாஷியத்தைக் கண்டார்கள். இவை திரி பதார்த்த நிச்சயமுள்ளதாம். இதனை சைவரால் அங்கீ கரிக்கப்பட்டது ஓர் காலத்தே.

பின்னர், சோமநாத சிவாச்சாரியரென்ற பெரியார் தோன்றி மேற்படி சூத்திரத்திற்கு சிவாத்தைவதம் என்ற ஓர் பாஷியங் கண்டார்கள். இதனை வீர சைவர்களால் அங்கீகரிக்கப்படுவது. இச்சமயம் சைவத்தினின்றும் பிரிந்ததே.

இம்மூவரும் ஆரியர் வேதோப நிடதங்களை ஆசிரி யித்து பாஷியங் கண்டார்களெனினும் இயாகாதிகளை உடன்பட்டாரில்லை யென்க.

கலி-3058 சங்கராசாரியாரென்ற பெரியாரால் மேற்படி சூத்திரத்திற்கு வேதாதிகளை ஆசிரியித்து அத்துவைதம என்ற ஓர் பாஷியங் கண்டார்கள். இது ஒரே ஆன்மா தானுள்ளதென்று கூறும். பிராமணரல்லாதார் வேதாதிகளைப் படிக்கக் கேட்க சிந்திக்கக் கூடாதென்றும் சந்நியாசத்திற்கு லாயக்கற்றவர்களென்றும் கூறுவதோடு பல தீங்குகளும் பிராமணரல்லாதாருக்கு நேரிடும் வண்ணம் கூறியுள்ளார். இதனை ஸ்மார்த்தர்களால் அங்கீகரிக்கப் படுவது.

இவர் நீலகண்டரோடு வாதிட்டு ஜெயத்தைத் யடைந்ததாகச்சில சரித்திரங்கள் காணப்படுவது மேற்கூறிய கலி வருடத்தை நோக்குமிடத்து இவை ஆபாசமென விளங்கு மென்க.

கலி-4118 இராமாநுஜா சாரியரென்ற பெரியார் தோன்றிமேற்படி சூத்திரத்திற்கு வைணவ சமயத்தை ஆசிரியித்து திரிபதார்த்த நிச்சயங்கூறும் பாஷியம் ஒன்று கண்டார்கள். இதனை வைணவ ஆரியர்களங்கீகரியாததினால் தாழ்ந்த வகுப்பாருக்கு தனதபிப்பிராயத்தைப் போதித்து நெற்றியில் திருநாமமொன்றுகண்டு பிராமணருக்குச் சமமாக்கிவிட்டார்கள். இந்தக் கூட்டத்தாரைத் தென்கலை வைணவ சிரேஷ்டரெனக் கூறுவது. இவர்கட்கு யாகமுடன் பாடில்லை.

இந்த இராமாநுஜருக்கும் சங்கராசாரியருக்கும் விவாதம் நடந்து சங்கரர் தோற்று, தனது சந்நியாசத்தையும் விடுத்து வெள்ளை வஸ்திரம் உடுத்து கோவிந்த நாமத்தை இதயத்தே கொண்டு சென்றாரென்று கூறும் சரிதமுமுள. இவ்விராமாநுஜரையே பின்பற்றிவந்த வேதாந்த தேசிகர் யாகத்தை உடன்பட்டு நெற்றிக்குறியைப் பேதப்படுத்தி நின்றார்கள். இவரை பின்பற்றினோர்களை வடகலை வைணவ சிரேஷ்டரெனக் கூறுவது.

கலி-4228 மத்துவாச்சாரியரென்ற பெரியார் தோன்றி மேற்படி சூத்திரத்திற்கு விஷ்ணு பரத்துவம் கூறும் துவித

பாஷியமொன்று கண்டு நெற்றியில் கருந்திலதமும் கண்டு நின்றார். இவரைப் பின்பற்றினவர்களே மத்துவ சமயத்தினரெனக் கூறுவது.

இவையிற்றையெல்லாம் இந்துசமய ஆச்சாரியரென் பதோடு கூட்டுவர் மக்கள்.

கலி-2600 ஜெயின மதத்தைப் பின்பற்றி முறையே இருபத்திநான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றி பிரதமானி யோகம், கரணானி யோகம், திரியானி யோகம், சரணானி யோகம் எனக்கூறும் வேதங்களும் இதனைப்பின்பற்றி பல ஆகமபுராணாதிகளுங்கண்டு நின்றார்கள். நெற்றியில் வெண்ணிறத்த திருநாமத்தையுடையவர்களாம். ஆரியர் யாகாதிகளைக் கண்டித்து நினறார்கள். இதில் இரண்டு பிரிவுகளுண்டு. திகம்பரிகளென்றும் சுவேதாம்பரிகளென் றும் கூறுவது.

கலி—2558 பதினெட்டு அறகதர் தோன்றி வினையப்பிடகம் சூத்திரப்பிடகம் அபிதருமப் பிடகம் கண்டார்கள் சக்கிரவர்த்தியாயிருந்து துறவடைந்த சித்தார்த்தி மகாராஜா வென்பவர் பௌத்த சமயத்தை ஆசிரயித்து திரிபிடகத்திநின்று மும்மணி யென்னும் வாக்கியத்தைக் கண்டு ஆரியர்களது ஆபாசமாகிய இயாகாதிகளையும் ஆசார அநுஷ்டானங்களையும் கண்டித்துநின்றார்.

கலி-3102 கிருஸ்துயென்னும் பௌத்த பிட்சுயென்பவர் மேல் நாட்டையடைந்து யூத மதத்தை சீர்திருத்தி சில நீதிகளைப் போதித்து நின்றார்கள். இந்த நீதிகளைத் திரட்டி பைபிள் என்று கூறுவது. இதில் காதலிக்ஸ் யென்றும் பிராடஸ்டன்ஸ் யென்றுங் கூறுவது. இவை யிற்றைப் பொதுவாக கிருஸ்துவ சமயமெனக் கூறுவது.

கலி-3683 முகம்மது நபி என்பார் ஒருவர் தோன்றி, சித்தரால் கண்ட அல்லா யென்னும் மொழியை ஆசிரயித்து பல நீதிகளைப் போதித்து நின்றார்கள். இதனை ஒன்று

படுத்தி யவையிற்றிற்குக் குரான் எனக் கூறுவது. இத னைப் பின்பற்றினோர்களை முகம்மது சமயத்தவரெனக் கூறுவது.

மேற்கூறிய பௌத்த கிருஸ்துவ முகம்மதிய சம யங்களை மக்களாயுள்ளார் யாவரும் படிக்கக் கேட்கச் சிந் திக்க உரிமையுண்டு. இவையிற்றில் ஆண் பெண் என்ற யிருபேதமே யுளதென்க. சித்த சமயத்தும் அங்கனேயே யாம்.

கலி சுமார் 4500 இராமானந்தரென்னும் ஓர் பெரியார் தோன்றி சீதா, ராம, லக்ஷ்மணன், ராதா, கிருஷ்ணன், என்ற வடிவங்களை யமைத்து வணங்க வேண்டுமென்று போதித் தார். இதனை ஜனங்கள் வெறுத்தார்கள். பின் காசி யடைந்து மிகத்தாழ்ந்தவர்களென ஆரியர்களால் தாழ்த் தப்பட்ட சண்டாளர்களை சிஷ்யராக்கி தனதபிப் பிரா யத்தை நிறைவேற்றினார்கள்.

இக்காலத்திலிதனை யெல்லோரும் வணங்கி வருகின் றார்கள். ஆனால் பிராமணரல்லாத மேற் குறித்த விக்கிர காதிகளை பிராமணர்கள் வணங்குவது தகுதியாமோ? ஆம். இராம ராஜ்ஜியத்தில் பிராமணரல்லாதார் தபசு செய்யக்கூடாதென்ற ஓர் நிபந்தனையைப் பிராமணர்கள் விதித்திருந்தார்கள். இதனை மீறி தவ மாற்றிய பிராமண ரல்லாதானை பிராமணரது தூண்டுதலினால் இராமன் கொலை செய்தான். அந்த நன்றியை முன்னிட்டு வணங்குகிறார்க ளென்க. கிருஷ்ணனுக்கு மிங்ஙனே பல காரணமுண்டு அவை தன்னைத்தானே கடவுளென்றமை யோடு பலவுளவா மென்க.

ஆனால் பிராமணரல்லாதார் விரோதியாகிய ஸ்ரீராமனை, அல்லாதார் வணங்குவானேனெனின் இராமனுக்குப் பின் வந்த அரசர்களை தங்கள் வசப்படுத்தி அல்லாதாரை வணங்கச் செய்தார்களென்க. பின்னர் அறியாத சில மக்களும் பழக்கங் காரணமாய் நாளிது பரியந்தம் வணங்கி

வருகிறார்கள். அறிந்தால் வணங்கமாட்டார்களென்பதே. இங்ஙனம் யாம் கூறுவது பற்றி யென்னிடத்து அசூசை கொள்ளற்க. இவை யெம்மால் பல நூற்களை ஆய்ந்துக் கண்டதாம்.

பின்னர் குருநாநக் சமயம், பிரமசமாஜம், ஆரியசமாஜம், பிரமஞான சங்கம், சுயமரியாதைச் சங்கம் முதலிய பிறவும்.

இவை இங்ஙனம் தோன்றுவதற்கு ஏதுவாயுள்ளது சித்தசமயமேயாம். இதனைப் பின்பற்றுவோமானால் நமது ஜாதிவரி சமயவரி நீங்கிச் சந்துஷ்டியோடு பேரானந்த சித்தினது பெருவாழ்வாம். வியாபகத்தில் இரண்டறக்கலப்பதோடு இவனும் கலந்துவாழ்வோ மென்பதில் ஐயமில்லை.

கலி ஆரம்பமுதல் 4000 இறுதியாகத் தமிழ்த்தலைவர்கள்தோற்றி சைவவைணவ பரத்துவம் கூறி நின்றார்கள். அவையிற்றை சிலது கூறுவோம்.

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனப் பெரிய நால்வர்தோன்றி தமிழ் பாக்களினால் தோத்திர ரூபமாய் திரிபதார்த்த நிச்சயமுடையதாய் கௌமார சாக்த சமயத்தை சைவ சமயத்தோடு சேர்த்து சிவபெருமானைத் தலைவனாகவும் கௌமார சமயத்தலைவராகிய சுப்பிரமணியரைப் புத்திரராகவும் சாக்தேய சமய தெய்வமாகிய பவானியை பாரியாளாகவுங் கண்டு தோத்தரித்து நின்றார்கள். இதனை தேவார திருவாசகமெனக் கூறுவது. இந்நால்வரையும் சைவ சமயாச்சாரியரெனக் கூறுவதென்க.

கலி சுமார் 4200 மெய்கண்ட தேவர் அருனந்தி சிவம் மறைஞான சம்பந்த சிவம் உமாபதி சிவம் முதலிய நால்வர் தோன்றி ஆகமாதிகட்கு இசைய சிவஞான போதம், சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய நூற்களை தமிழிலமைத்

தார்கள். இதில் சிவபரத்துவம் திரிபதார்த்த நிச்சயமும் மலிந்து கிடப்பனவாம். இந்நால்வர்களையும் சந்தான ஆச்சாரியர்களெனக் கூறுவது.

கலி முதலாக 4000 இறுதியாக பன்னிரு ஆள்வார்கள் தோன்றி வைணவ தெய்வமாகிய மகா விஷ்ணுவுக்கு பரத்துவமும் திரிபதார்த்த நிச்சயமும் கூறும் தமிழ் பாக்களை திருவாய் மலர்ந்தருளினர்கள். இவையிற்றை திருவாய்மொழி அல்லது நாலாயிரப் பிரபந்தமெனக் கூறுவது வைணவ சாம்பிரதாயமாமென்க.

கடவுளுக்கு சுற்றத்தார் உற்பத்தியாயின முறை சில கூறுவன். நம் நாட்டில் ஆண் பெண் இருபாலரும் கடவுளை ஆன்ம நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் கண்டு வழிபடுவது ஒரு தலையாம். மற்றும் மாமன், மாமி, தந்தை, தாய், தமையன், தமக்கை, தோழன், ஆசாரியன், எஜமானன், எனப்பல வுரிமையோடும் பாவித்து நிற்பது வழக்கமாம். இங்ஙனம் நின்றார்க்கு தனது போதமே யோருருக்கொண்டுத் தோற்றும் அந்நிலையை கடவுட் டரிசன மெனக் கண்டுக் களித்து நிற்பது மக்கள் கடமையாம். இதனை போதம் திரண்டு அருள் மேனியாகி புலையனை யாள இப்புவியில் வந்த தென்று பல பெரியார் குறித்துள்ளாரென்க. இதனை உணர்ந்து நிற்பதுதான் மக்கட் பிறப்பின் மாட்சியென்க. இந்நிலையை உணராதார் கால வசத்தால் நீண்ட காலத்திற்குப் பின்னர் உள்ளபடியே மேற்கூறிய முறையை கடவுளர்க்குச் சுற்றத்தாரெனவே கண்டுகளித்தார்கள்.

அவை இளமையெனும் சப்த வாச்சியனாகிய முருகனை நாயகனாக பாவித்து நின்ற வல்லி தேவசேனா யெனற இரு கன்னிகைகட்கு முருகனை தலைவனாகக் கண்டும் மேற்கூறிய இருவரையும் மனைவியர்களாக்கியும் தமையன் முறையில் பக்தி செய்த நவ வீரராதியர்களைத் தம்பியர்களாக்கியும் மற்றும் பக்தி செய்த பல புருஷர்களை அடிமைகளெனக் கண்டும், சில பெண்கட்கு தரிசனங்கொடுத்த முறையில்

சிறை யெடுத்ததாகக் கூறும் சில சரிதமுமுள. அம் முறையை பின்பற்றி சில விழாக்களும் நடைபெறுவது பிரத்தியக்ஷமேயாம். சிவத்தை தாய் தந்தையாராகப் பாவித்து நின்ற ஞானசம்பந்தரை பிள்ளையாக்கியும், தோழன் முறையிற்கண்ட சுந்திர மூர்த்திக்கு தோழன் முறையிலும், ஆண்டானாகக் கண்ட அப்பருக்கு ஆண்டவ ராயும், ஆசாரியராகப் பாவித்து நின்ற மணிவாசகருக்கு ஆசாரியராயும், மருமகரா்ய் பாவித்த மலையரசனுக்கு மருக ராயும், பார்வதியம்மையாருக்கு புருஷராயுந் நின்றநிலையும். மகா விஷ்ணுவை நாயகனாகக் கண்ட சீதேவி பூதேவியர் கட்டு புருடராயும், தமையனாகப் பாவித்து நின்ற உமைக்கு தமையனாகியும், ஆசாரியனாகக் கொண்ட ஆள்வா்ராதிகட்கு ஆசாரியனாகவும், ஆண்டாளுக்கு அகமுடையானாகவுந் நின்ற நிலையும் தன்னை சோரநாயகனாகப் பாவித்து நின்ற எனைய பெண்களை நாச்சியார் முறையிற் சிறை யெடுத்தாயும் நின்ற நிலையிலையுணரு மாற்றானே விளங்குமன்றோ.

இம்முறையானே பேரானந்த சித்திற்கு பந்தமும் தொந்தமும் உடைத்தாய் மிளர்கின்றது. இம்முறையானே விக்கிரக ஆராதனை எவ்வளவு அவசியமென்பதும் ஊகித் துணர்ந்து நிற்பது தகுதியாம். மக்கள் ஆக்கை நீர் மேற் குமிழி போறலின் ஒல்லையில் உணர்வது தகுதி.

இம்முறையானே விக்கிரக ஆராதனை அவசியமன் றென்று வருமோ வென்ற சந்தேகம் நிகழும். அவையல்ல சித்தர்கள் கருத்து ; பின்னை யாதெனின் ? யாதொரு தெய் வங் கண்டீர் அத்தெய்வமாகி வருவது பேரானந்த சித்தெ னும் பெரிய பொருளாம். ஆதலின் யார் யார் எங்ஙனம் குறித்து வழிபடினும் எமக்கு உடன்பாடே. ஆனால் அவண் ஒற்றுமையோடும் சாந்தத்தோடும் க்ஷமையோடும் கண்டு களித்து உண்டுடுத்தி வாழ்வதே வாழ்வாம். இம்முறை யைப் பின்பற்றாது வைசம்யத்தோடு சில மக்களை புறத் தும், அகத்தும், அகப்புறத்தும், புறப்புறத்தும், நிற்கச் செய்வது சகோதரத்துவ மின்மையைக் காட்டும். கடவு

ளால் ஆக்கப்பட்ட மக்கள் கடவுட்கே அடிமையன்றி மக்கட்கு மக்கள் அடிமையாதல் சால்புடைத் தன்று. ஆனதினுல் சாம்மியத்தை மேற்கொண்டு நிற்றலே மக்கள் கடமையாம். இதுவே கடவுட்கு உரியவை யாகும்.

* காகமுறவு கலந்துண்ணக் கண்டீர கண்டாகார சிவத்த
போகமேனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பி பூரணமாய்
ஏகவுருவாய் கிடக்குதையோ வின்புற்றிட நாமினி யெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்கு சேரவாரும் ஜேகத்தீரே !

இனி சண்டாளர்கள் யார் என்பதைப்பற்றி சில கூறுதும். "தவமதிற் சிறந்த கௌதம முனியை சரண மடைந்து நின்ற தாபத தாபதிகள் அவமதியுற்று சாப மதேற்று அடைந்தனர் மாசண்டாள வடிவம்" எனக்கூறும் மொழியை யாதரவாகக்கொண்டு கூறுதும். கௌதம ஆசிர மத்தை அண்மியிருந்த மகரிஷிகள் சீரும் சிறப்பு முற்று வாழுநாள் அன்னர்களது முற்செய்கைகள் ஞாபகத்திற்கு வர யாகாதிகளைச் செய்ய வேண்டுமென்று மாமுனி வரிடத்து கூற மாமுனி மறுத்து சித்தர் சமய நெறியை போதித்து கிருதார்த்தர்கள் ஆகுங்களென்று ஆசி கூற மகரிஷிகள் ஒவ்வாதவராய் சின்னுளிருந்து மாமுனியின் மாடுகளிற் சிலவற்றை நெருப்பில் வாட்டித்தின்று விட் டார்கள். இதனையுணர்ந்த மாமுனி ஜீவகாருண்ய நிலையை பன்முறை போதித்தும் அதனை மகரிஷிகள் அங்கீகரியா தமை கண்டு இதுமுதல் சண்டாள வடிவினராய் சஞ்சரிப் பீரென சாபமளித்தார். இதனை உன்னி துக்கத்தை யடைந்த மாதவர்கள் தண்டமிழ் நாட்டை யடைந்து மாமுனியால் கிடைத்த சாபத்தை தமிழ் மக்கட்கு கூறி இரந்து நின்றார்கள்.

பின்னர் தமிழ் மக்கள் ஆரிய மாதவர்களுக்கு உடை யுண்டி முதலிய உதவி பல பூமிகளை இனமாய் கொடுத்து ஆதரித்து வந்தார்கள். நீண்ட காலத்திற்குப் பின்னர்

நாரத மஹரிஷியால் ஆசிரியிக்கப்பட்டு தங்களது வேதத் திற்கூறியபடி தன்னைத் தவிர வேறு தலைவன் இன்றென்ற ஞாபகம் வர கௌதம முனியின் சாபம் நம்மை வருத்தா தென்று உணர்ந்து தங்கள் பழைய் வேதத்தைப் பிரசாரஞ் செய்யத் தலைப்பட்டார்கள். இதனை மறுத்து நின்ற பௌத்த மக்களை மணிவாசகர் காலத்து அரசர்களினுதவி யால் நாட்டினின்றும் துரத்தப்பட்டார்கள். அன்னவர் களைத்தான் பஞ்சமரெனக் கூறுவது.

மற்றும் நீலகண்டர், அறதத்தர், சோமநாதர் இரா மானுஜர், வேதாந்த தேசிகர், மத்துவாச்சாரியார், இராமா நந்தர் முதலியோரால் பஞ்சமர்களுக்கு சிற்சில சீர்திருத் தங்களை செய்தாரெனினும் அவை பிரயோஜனத்தை தர வில்லை யென்பதே. ஆனதினால் அன்னவர்கள் ஊர் புறத் தே வசித்து வருகின்றார்கள்.

உண்மையில் சண்டாளர்களென்பது பஞ்சமர்களை குறிக்காதென்க கௌதமர் சாபத்திற்கிலக்கான சில ஆரி யர்களையே குறிக்குமென்க. இம்முறையை ஆசிரியித்தே பஞ்சமர்கள் வசிக்கும் வீதியில் பார்ப்பனர்கள் சென்றால் அத்தோஷம் (அவர்களின் சண்டாளத்வம்) போக்குப் பொருட்டு வீதிகளை பெருக்கி சாணமிடுவ தென்பது அன்னளிதுவரை வழக்கில் இருக்கின்றன. இம்முறை யானே பஞ்சமர்களென்று ஆரியர்களா லொதுக்கப் பட்ட மக்கள் பஞ்சமர்களல்ல வென்பதற்கு இன்னும் அநேக சான்றுகளுண்டு அதாவது பிராமண வகுப்பாருள் மத்தியான பறையரென்ற ஒரு கூட்டத்தாருண்டு இவர் கள் மத்தியானத்தில் பூணூலை அறுத்தெறிந்து ஸ்நானம் செய்து பூணூல் அணிந்து சந்தணத்தினால் நெற்றியில் நாமம் அணிவார்கள் விரிவஞ்சி விடுத்தனம்.

ஜகத் குருவென்று தம்மைத் தாமே உயர்த்திக் கொண்ட சங்காராச்சாரியார், இதற்கு பிராயச்சித்தங் கண் டாரா? என்பதே; இல்லை. காசியில் தாமோர் பஞ்சமரா

கிய சண்டாளனைக் கண்டதாகவும், அன்னுரை விலகச் சொன்னதாகவும் அன்னுரால்தான் சண்டாளரென்பார் யாருமில்லையென்பதை உணர்ந்ததாக ஓர் சரித்திரங் காணப்படுகின்றது. இவைதான் அவர் செய்த சீர்திருத்தம்.

இந்துவென்ற பெயராருக்குடையது அது ஆரியர்கட்கே யுரியதாம் எங்ஙனமெனிற் கூறும் முகம்மதிய ராஜாங்கம் நந்நாடடையந்தகாலத்து ஆரியர்கள் முகம்மதிய தலைவர்களை யண்மி நாங்களெவ்வித குற்றஞ் செய்தாலுந் தண்டித்தல் கூடாதென்று கேட்டுக்கொண்டார்கள் அதற்காதாரம் (மனுஸ்மிருதியேயாம்) அதற்கு முகம்மதிய தலைவர்கள் ஏனென்று வினவியதற்கு நாங்கள் பூசிக்கத்தக்கவர்களென்று கூற ஆனுல் நாங்களோ வென்ன நீங்களல்லாதாரென்னலும் கோபங்கொண்டு இன்றுமுதலுங்களை இந்துவென்றழைக்க உத்திரவிட்டிருக்கிறேன் (அதாவது தாழ்ந்தவர்கள அறிவில்லாதவர் மிலேச்சர்கள் என்பன பிறவுமாம், ஆனதிஞல் இந்து வென்ற பெயர் ஆரியர்கட்கே யுரியனவாம் தமிழருக்குரியனவல்ல வென்பதே.

இந்து லாவைபற்றிச் சில கூறுதும். ஆங்கிலமன்னர் வந்தகாலத்து மேற்கூறிய படியே கூற அதற்கவர்கள் கிறுமனல், சிவில், என இரண்டுண்டு அதிற் கிறுமனலில் குற்றஞ் செய்த வெல்லாரையுந் தண்டித்தலவசியம் ஆனதிஞல் சிவிலில் வேண்டுமானுற் சில நன்மை செய்கிருேமென்ன. பிராமணர்கள் தான் சந்நியாசத்திற் கதிகாரியென்றும்மற்றவர்கள் சனனியாசத்திற் கதிகாரி அல்லவென்றும் மற்றவர்கள் சன்னியாசம் பெற்ருலும் சம்சாரிகளேவென்றும், பிராமண சன்னியாசிகளைச் சிறையி லடைத்தல் கூடாதென்றும். பிராமணரல்லாத பெண்களை பிராமணன் சுவீகரித்தால் அதிற் பிறக்கும் பிள்ளைகட்கு பிராமணன் சொத்திற் பாத்தியமில்லை யென்றும் பிராமணப்பெண்ணை அல்லாதான் சுவீகரித்தால் அதிற்பிறக்கும் பிள்ளைகட்கு தந்தை சொத்திற் பாத்தியமுண்டென்பது.

இம்முறையானே இந்து மதத்தில் அல்லாதாருக்குச் சுதந்தர மின்மையையும் பிராமணருக்குச் சுதந்தரமுடைமையையுங் காட்டுகின்றதல்லவா இம்முறையே அல்லாதார் சன்னியாசம் பெற்றும் சன்னியாசிகளல்லவென்று மேற்கூறிய சட்டத்தின்படி பூர்வச்சொத்திற் பாகம் வாங்கினவரும் சுவாமிகளென்ற பெயரை, முதலியார் பிள்ளை செட்டியாரென்ற பழைய பெயரையே மீண்டும் வைத்துக்கொண்டிருக்குஞ் சன்னியாசிகளு முளவேன்பதே.

ஆனதினால் பிராமணரல்லாதாருக்கு இந்து லாவினால் எவ்வளவு கேவலஞ் சித்திக்கிறதென்று நாம் கூறவேண்டியதில்லை நீங்களே யோசித்துப் பாருங்கள் ஆனதினால், இந்துவென்ற சொல் நமக்குரியதென்று கூறுதல் பொருந்தாதென்க. அவை ஆரியர்கட்ரிகேயுயாதமென்க.

**தீக்கை** என்பது பற்றி சில கூறுதும். அவை புறத்தீக்கை அகத்தீக்கையென இருவகைப்படும். இதிற் புறத்தீக்கை ஆக்கைக்கேயுரியனவாம். அதாவது ஆககையைப் பிணியின்றியிருக்கச் செய்தலே. இதனை உடற்சித்தி எனக் கூறுவது.

**அகத்தீக்கை** ஆன்மாவிற்கேயுரியனவாம். அவையாவன, ஆன்மா தமது புறப்பற்று, அகப்பற்றுகளை நீக்கி குழைந்திருத்தலென்பது. இதனை உயிர்சித்தி எனக் கூறுவது.

இதனை யறியா இரவலர் தீக்கை மண்டபமியற்றி, குண்டமண்டலங்களை யமைத்து, சிஷ்யனை முதல் நாளே விரோஸனம் செய்வித்து, மறுநாள் ஸ்நானம் முதலியன செய்து தீக்கை மண்டபத்து தனது முன்னிலையிலிருத்தி கடங்களில் பூரித்துள்ள ஜலங்களையும் பால் தயிர் முதலியவற்றை சிஷ்யன் சிரசிற் பெய்து புறசுத்தி செய்ததாக பாவித்து அகச் சுத்திக்கு பஞ்சகவ்ய மருந்தைச் செய்து அவனது ஜாதி சமயத்துக்கு தகுந்தபடி ஏதேனுமொரு மந்திரத்தை காதிற்கூறி காசுந்தூசும் பெறுதலென்பது.

இத் தீக்கையை பெற்ற சிலமக்கள் இது பரியந்தம் உண்டுடுத்தி யுறவாடி வந்த மனைவி, மக்கள், சுற்றத்தார், சினேகிதர் முதலாயினோர் உணவு கொடுத்தாலுண்பதில்லை அன்னோர்களை தொடுவதில்லை. தொட்டால் ஸ்நானஞ் செய்வது. இவர்கள் காண வுணவாதிகளை யுண்ணுவது மில்லை. பின்னர் வுண்ணுவது இயாரிடத்தில்? பார்ப்பனர்களோ, சைவர்களோ உண்ட பின்னர் உச்சிட்டம் உண்ண காத்திருப்பது, சுணங்கன் போல். என்னே இவர்களது தீக்கையின் விசேடம். இவர்கள் எத்தனை தீக்கை பெற்றாலும் தீக்கை செய்த ஆசாரியனோடு சமபோஜனம் பண்ண சாத்தியமில்லை. தீக்கை யேற யேற எச்சிற் சோற்றிற்கு எதிர் பார்த்திருப்பதுதான் கண்ட பலன். இதனை விண்டேனென்று வெறுப்படையாதீர்கள்.

விபசார மென்பதை பற்றி சில கூறுதும். விபசாரஞ் செய்தலென்பது, மனத்தாலும், வாக்காலும், காயத்தாலுமாம். கண்ணினாற்காண்பது, காதால்கேட்டலென்றபோதே மனதினாற் சிந்திக்கிறான். வாக்காற் புலம்புகிறான், பின்னர் காயத்தால் செய்கிறானென்பது. காயத்தாற்செய்வதைவிட வாக்காற் கூறுவது மிகையாம். அதனிலும் மிகை, மனத்தால் நினைத்தலாம். ஆனதினாலிவை மூன்றுமுறையும் ஆபாசமேயாம்.

நிற்க சிலர் மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும், விபசாரஞ் செய்கிறார்கள். சிலர்மனத்தாலும், வாக்ககாலுஞ் செய்கிறார்கள். சிலர் மனத்தால் மாததிரஞ் செய்கிறார்கள். இதிலாருயர்ந்தவன்; எல்லாருங் கசடரே. மனோவாக்காற் செய்பவர்கள், காயத்தாற் செய்பவர்களைக் குறைகூறி பலர் மத்தியில் அவமதிக்கிறார்கள். வேறுசெய்வதென்ன தனக்கு காசுந், தூசுஞ் சோறுமிடுகிறவர்கள் விபசாரஞ் செய்தோ, பொய் சொல்லியோ, பொய் பத்திரமெழுதியோ, வஞ்சனையாலோ, சூதாலோ, சம்பாதித்து கொடுப்பதை யேற்று களித்துண்டு அன்னோர்கள் செய்கைக்கு முடன்பட்டு

வாழ்கிறார்கள். இவை சன்யாசத்திலுமுண்டு சம்சாரத்திலு முண்டென்க.

இந்த சன்யாசிகள் மனத்தால் செய்கிறவர்கள் வாக்காற் செய்கிறவர்களும் சரீரத்தாற் செய்தாலென்ன. காசுந் தூசுஞ்சோறுமகப்படாது. அதனைக் குறித்துத்தான். ஆனாலதற்கு முடையின்றியிருந்தாற் காயத்தினாலுஞ் செய்வார்களாவென்பதே. சிவன், மால், பிரமன், சுப்பிரமணியர் போலன்றி ராதா கிருஷ்ணனைப்போல வைத்த கையை எடுக்கமாட்டார்களென்க, ஆ! என்ன ஆச்சரியம், இல்லையில்லை. கூறுவம் கேள். பணத்தாற் பெருத்த மடபதிகளை கண்டுங் கேட்டு மறிந்திருப்பாயானால் ஈதுனக் காச்சரியமாயிராதென்பது. ஆனதினால் வாசகர்களே இதன் முடிவை யுணருதல் கடமையென விடுத்தனம்.

நெற்றிக்கு இவை சிறு குழந்தைகட்கு கண்ணேறு கழிப்பான் வெண்மை, செம்மை, பசுமை, கருமை, மஞ்சள் முதலியவற்றால் அணிவது. இவையிற்றை காமக் கிழத்திக் கிழவரும் அலங்கார மென்றணிந்து வந்தார்கள். நாளடைவில் இது குறுகியும் நீண்டும் அகன்றும் பற்பல விகாரங்களாய் சாதி சமையம் என்பனவற்றிக்கு அறி குறியாய்நின்று மக்களை வருத்தி ஆங்கில அதிகாரியர் களால் இது சரி இது தப்பென்று கூறவேண்டியிருக்கிறது. ஆனதினாலிவை அவசியமன்றென்றுதான் கூறவேண்டியிருக் கிறது.

சாதியவசியமா? ஆண் பெண்ணிருபாலருக்கும் காம வெறி வந்தகாலத்து சாதி, சமையம், குலம், கோத்திரம், சூத்திரம், சாத்திர முதலியவனை முறையின்றி, காலம், நேரம், இடம், எச்சில், ஆசாரம், அனுஸ்டானமின்றி, போய் விடுகின்றன. இவை நீங்கிய காலத்து எல்லா முண்டாகின்றன. ஆனதினால் இப்பாவிகளைத் சண்டாளர்களெனக் கூறுதல் சாலவும் பொருத்த முடையதாய்க் காணப்படுகிறது.

உபதேசத்தைப் பற்றி சில கூறுதும். உபதேசமென்பது இரண்டாவதொன்றை தெரிந்துகொள்வதென்பது. தாய் தந்தை உபாத்தியாயரிடம் தெரிந்துகொண்டதைவிட ஒப்புயர்வின்றிய மற்றொரு பிரக்ஞையை ஞானசாரியனிடத்து தெரிந்துகொள்ளுதலென்பது. அது மக்கட்கு எவ்வித தீமையும் தாராதிருத்தல் வேண்டும். தனக்கு மேலானநிலையை தருவதாயு மிருத்தலென்பதே.

இங்ஙனமின்றி சமய சார்பாய் ஜாதி ஆசாரங்கட்குட்பட்டதொன்றை இரகசியமாய் காசாசையுள்ள ஆசாரியனிடத்தில் தெரிந்துகொண்டு முண முண வென்று ஜெபிப்பதல்ல. இதனை முன்னறே விளக்கியுள்ளேன். அவை உடற் சித்தி, உயிர் சித்தி, முத்தி என்பனவாம்.

ஜாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே சாத்திரச்
சந்தடிகளிலே கோத்திரச்சண்டையிலே
ஆதியிலே யபிமானித்தலைகின்ற வுலகீ ரலைந்தலைந்து
வீணே நீரழிதலழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான நிருத்தமிடு
தனித்தலை வரோருத்தர் தாமே
வீதியிலே யருட்சித்தி விளையாடல் புரியமேவுகின்ற
தருணமிது கூறுகின்றே னுமையே.

இன்னும், இவை சஞ்சிகை வடிவாய்த் தொடர்ந்துவரும்.

புத்தகம் கிடைக்குமிடம் :—

ம-ா-ா-ஸ்ரீ கோவிந்தசாமி முதலியார்,
விவேகாநந்தர் ஹெல்மிஷன்,
திருநாகேஸ்வரம், கும்பகோணம்.

ம-ா-ா-ஸ்ரீ அண்ணுமலை பத்தர்,
காமாட்சியம்மன் கோவில் தெரு,
மாயவரம்.

ம-ா-ா-ஸ்ரீ பாலவேங்கடராமஞ் செட்டியார்,
நெகமம், பொள்ளாச்சி.

ம-ா-ா-ஸ்ரீ கங்காதர உபாசகன்,
பங்காளி பஜார், பறங்கிமலை.